தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990, ஏப்ரல் 12, வியாழக்கிழமை,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில், காலை 9—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

" இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது."

இல்லாமை எனப்படும் வறுமையைக் காட்டிலும் கொடுமையானது எது என்று கேட்டால், வறுமையைக் காட்டிலும் கொடுமையானது, வறுமை ஒன்றே ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 2215 மற்றும் 6878 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

இதர மொழியில் கல்வி பயில்வோர் தமிழ் மொழியைக் கற்க வசதி.

* 2550—திரு. பெ. சு. திருவேங்கடம் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதர மொழியில் கல்வி பயில்வோர் தமிழ் மொழியைக் கற்க அரசு பிரத்யேகமான சலுகை அளிக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ் அல்லாத பிற மொழிகளை முதல் மொழியின் கீழ் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழி பயில விரும்பினால், பயில விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து, பள்ளி நேரம் தவிர்த்துப் பிற நேரங்களில், பள்ளி தலைமை ஆசிரியரே அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய அரசு ஆணை யிட்டுள்ளது.

திரு. வ. முல்லை வேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கனவுகளை நனவாக்கி வரும் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், தர்மபுரி மாவட்டத்தில், தளி தொகுதியில் தெலுங்கு மொழி மட்டும் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலே பிறந்த, அந்தக் குழந்தைகள் தமிழ் மொழியைப் படிக்கின்ற வாய்ப்பே இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட இடங்களில், தமிழ் மொழியைப் பயிற்றுவிக்க, புதிய பாடத் திட்டத்திலே அல்லது கல்விக் கூடங்களிலே உருவாக்க முன்வருமா அல்லது புதிதாக தமிழ் பள்ளியை, தமிழ் பாடங் களைப் பயிற்றுவிப்பதற்கு, ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : ''தேமதுரத் தமிழோசையை'' எல்லோரிடத்திலும் பரப்ப வேண்டும் என்பதற்காக: தெலுங்கை, கன்னடத்தை, அதுபோன்ற பிற மொழிகளைத் தாய்மொழியாக உள்ளவர்களிடத்தில் கட்டாய மாக தமிழைப் பயிற்றுவிப்பது முறையென்று இந்த அரசு கருதவில்லை. ஆனால், அவர்கள் தமிழ் பயில விரும்பினால், அதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழைப் படிக்க பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளி னுடைய எண்ணிக்கை குறைந்தபட்சம், இன்ன எண்ணிக்கை என்ற அளவுக்கு இருக்குமானால், அவர்கட்காகத் தனியாகத் தமிழ் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் மொழி யைக் கற்காமல், அல்லது அவர்களுடைய தாய்மொழி அல்லது வேறு மொழிகளைக் கற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற பாடசாலைகளுக்கு அல்லது பள்ளிகளுக்கு, அரசு மானிய உதவி அளித்து வருகிறது. அப்படிப்பட்ட நிலையிலுள்ள பள்ளிகளுக்கு, நிச்சயமாக தாய்மொழியைக் கற்க வேண்டும் என்கிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்துமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே விடை இருக்கிறது. எந்தச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக

1990 ஏப்ரல் 12]

இருந்தாலும், குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை இருக்குமானால், அவர்கள் தாய் மொழியிலேயே படிப்பதை—தாய் மொழி மூலமாகக் கல்வி பெறுவதை, கொள்கை அடிப்படையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அத்துடன் தமிழ் படிக்க விரும்புகிறவர்கள், அவர்களுடைய தாய்மொழி வேறு எதுவாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலே இருப்பார்களேயானால், அவர்களுக்காகச் சிறப்பாகத் தமிழ் பயிற்றுவிக்க வழி செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழைக் கற்காதவர்கள், பிறகு அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்று, தமிழக அரசின் சார்பில் வேலை வாய்ப்பு கோருகின்ற நேரத்தில், அவர்களுக்கு தமிழ்மொழி தெரிந்திருக்க வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது. ஆனால், நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்களில், தாய்மொழி கற்கவில்லை என்று சொன்னால், அங்கிருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்திலேகூட பதிவு செய்வதற்கு அனுமதிப்ப தில்லை. நம்முடைய மாநிலத்தில் தமிழ் கற்கவில்லை என்றாலும் கூட, வேறு மொழிகளில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தாலும், இங்கே வேலை வாய்ப்பு பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளை எல்லாம் ஆவன செய்து அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் ஒரு குழப்பமும் சேர்ந்து இடம் பெற்றிருக்கிறது. தாய்மொழிக்கு முன்னுரிமை என்பதைத் தமிழக அரசு நீண்டகாலமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தாய் மொழி என்பது மிகச் சிறுபான்மை யோருக்கு—தெலுங்காக இருக்கலாம் ; மலையாளமாக இருக் கலாம் ; கன்னடமாக இருக்கலாம் ; வேறு எந்த மொழி யாகவும் இருக்கலாம் : அவர்களுக்குத் தாங்கள் தாய்மொழி யிலேயே படிக்காமல், தமிழிலேயே படிக்க விரும்பினால் அதற்கான வாய்ப்புகள் உண்டு. தாய்மொழியிலேயே படிக்க விரும்பினால், அதைத் தடை செய்வது, அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்றதல்ல.

9-05 மணி

திரு. கே, ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மைனாரிட்டி பள்ளிக் கூடங்கள் சில செயல்படுகின்றன. அவைகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் அங்கே நடைபெறுகின்ற அளவிலே, அதாவது இஷ்டப் பாடமாக அங்கே தமிழையும் அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மொழி தமிழ்மொழி,

ஆரம்பத்தில் கற்கவேண்டிய மொழி தமிழ்மொழி. அது மாதிரி சமத்துவமான உரிமையும், சலுகைகளும் அவர்களுடைய தாய்மொழி என்ற அடிப்படையில் அனுமதிக்கும்படியான, மைனாரிட்டி மொழியினருக்கும் இங்குள்ளது போல சலுகைகளும் வசதிகளும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலிருந்து நான் இங்கே தெரிவித்துக் கொண்டிருப்பது எல்லாம் உறுப்பினருடைய கேள்வியின் விளைவுதான். தாய்மொழியில் பயில குறிப்பிட்ட எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்தால் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆனால் 3, 4 பேர் இருந்தால் அத்தகைய வாய்ப்பு அளிக்க முடியவில்லை. அவர்கள் தமிழ் படிக்க விரும்பினால் அவர்களுக்கு உரிமை உண்டு. தமிழ் படிக்க வேண்டுமென்று விரும்பினால் 10 பேர் இருந்தால் அவர்களுக்குத் தனியாக மாலை நேரத்தில் வகுப்பு நடத்த உதவி செய்யப்படுகிறது. ஆனால், அது அந்தந்தப் பள்ளியினுடைய நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாய்மொழி தமிழில் பி.ஏ., எம். ஏ., வித்வான் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்ன படிப்பு உள்ளவர்களுக்கு முன்னுரிமை என்ற நிலைமை வேலையைப் பொறுத்துத்தான் அமையும். எந்த வேலைக்கு அழைக்கிறார்களோ, அந்த வேலையைப் பொறுத்துதான் அது அமையும். ஆனால் எல்லா வேலைகளுக்கும் தமிழ் அறிவு வேண்டுமென்ற விதி இணைக்கப்படுகிறது. ஆகவே, தமிழ் அறிவு இல்லாமல் தமிழ்நாட்டில் வேலையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமை இயல்பாக இருக்க வாய்ப்பில்லை.

ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்தல்.

* 6908—திரு. கே. ரமணி ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சில கல்லூரிகள் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பணியில் சேர்த்துள்ளது பற்றி பல்கலைக் கழக ஆசிரியர்களின் தமிழ்நாடு அமைப்பு (A.U.T.) எதிர்ப்பு தெரிவித்துள்ளது அரசு அறியுமா ?